உ
சிவமயம்
முருகன் துணை

# விநாயகர் வணக்கம் (விநாயகர் அஷ்டகம்)

பந்தம் அகற்றும் அனந்த குணப்பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத்தொழுகின்றோம்

உலகம் முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருள் எவன் அவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள் உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டும் களைக்கண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம்

இடர்கள் முழுதும் எவன் அருளால் எரி வீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவன் அருளால் சுரர் வாழ்பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மறுப்புக் கணபதி பொன் சரணம் சரணம் அடைகின்றோம்

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

செய்யும் வினையின் முதல் யாவன் செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும் அந்தக்கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவை ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப் புரிந்து சரணம் அடைகின்றோம்

வேத மளந்தும் அறிவறிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும் நாதன் எவன் எண்குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயில் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன் வான் இடை ஒன்றாம்

அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற் சரணம் அடைகின்றோம்

பாச அறிவில் பசு அறிவில் பற்றற்கரிய பரன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பயிலப்பணிக்கும் அவன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம் அடைகின்றோம்

## கவலையைத் தீர்க்கும் கடவுள்

ஆர் ஆர் இருக்கினும் என் கவலை மாற்றுவது
ஆறுமுகக் கடவுள் என்று
அவனிமுதல் ஐம்பத்து அறுகாத தேசமும்
அறியாதவரும் உண்டோ
ஈராறு கையனே இருமூன்று முடியனே
இனியகனி வாய் அழகனே
எட்டு எட்டு அறுபத்து நாலான தோளனே
ஏக கண போகமான
கார் ஆறும் மேனிகரிமுகனுக்கு இளையனே
கழுகாசல ஆறுமுகனே
கற்றறி உற்றனே சித்தப்ர சித்தனே
கந்தப்பன் ஆதி தேவே
தார் ஆறும் ஐயனே துய்யனே ஐயனே
சரி சரி வரவேணுமே
தரணிதனில் மயில் மீதில் விளையாடி வருகின்ற
சண்முகக் குமர குருவே

## பொறுமைக்கும் எல்லை உண்டே

சிறுவயது முதற்கொண்டே திருச்செந்தூர் முருகனை நான்
தினந்தோறும் வணங்கி வந்தேன்
இருவிழிகள் திறந்தவுடன் பழனிமலை ஆண்டியை நான்
இதயத்தில் வணங்கி வந்தேன்
பொறு மனமே பொறு அந்த ஆறுமுகத்தின் அருளாலே
போயொழியும் துன்பம் என்று
பொறுத்தேனே! பொறுத்தேனே! பொன்பழனி ஆண்டவனே
பொறுமைக்கும் எல்லை உண்டே
ஒருபதிலும் கூறாமல் அருள் எமக்குத் தாராமல்
ஓடினால் என்ன செய்ய
ஓயாமல் நடக்கின்றேன் தாயான பெருமானே

வழிகாட்டு நானும் உய்ய
உறவினரும் உனையன்றி உதவுதற்கொருவரில்லை
ஓடிவா! பழனி வேலா!
ஓடோடி நீவந்து உன்பாதம் தொழுவோரை
உய்விப்பாய் குழந்தை வேலா!

- கவிஞர் மா. கண்ணப்பன்

## சண்முகா வருக வருக

சரவணையி லேபிறந் தாறுமுக வடிவான
சண்முகா வருக வருக!
தர்க்கமிடு சூரனை திக்கவேல் விட்டதொரு
சுவாமியே வருக வருக!
அரவணையில் மால்மருக குமரகுரு பரனெங்கள்
ஆறுமுகா ஓடி வருக!
அலைகடலின் மகரமீன் ஓடி விளையாடிய
அமரர்பதி வருக வருக!
கருவணையில் நற்சதுரமேல் நின்று நடனமிடும்
கணபதி துணைவன் வருக!
கடியை எண்ணயிரம் சமணரை வதைத்திடும்
கந்தனே ஓடி வருக!
மருவணையில் பெண்ணாட உலகமது காக்கின்ற
வடிவேல் இலங்கு கரமும்
வாலவய தாயுனது வாழ்மயில் ஏறிநட
மாடிவரு முருகேசனே!

## தண்ணிமலையே

அலைகடலுக்கப்பாலே மலைநாட்டில் அமைந்திருக்கும்
அழகான தண்ணி மலையே!
அலைபாயும் மனத்திடையே சிலநேரம் துதித்தாலும்
அருள்வானே தண்ணிமலையே!
விலைபோட முடியாத மலையளவு வளங்கொண்ட
பினாங்கு நகர்த் தண்ணி மலையைத்
தலையாட மனமாடத் தமிழ்பாடித் துதிப்போர்க்குத்
தலையாய செல்வம் வருமே!
கலம் ஏறிப் பினாங்கு நகர் கண்டவர் தமையெல்லாம்
காப்பாற்றும் தண்ணிமலையே!

நலம்தந்து நிலம்தந்து அருள் தந்து பொருள் தந்து
பாலிப்பான் தண்ணிமலையே!
மலைநாட்டில் அமர்ந்தவனை மனவீட்டில் கண்டவர்க்கு
மயிலேறும் தண்ணிமலையான்
கலையாத பெருவாழ்வும் நிலையான சுகவாழ்வும்
கண்முன்னே கொண்டு தருவான்!

- கவிஞர் மா. கண்ணப்பன்

## குன்றக்குடி குமரன்

மன்றாடி ஈன்ற மகன் குன்றக்குடி முருகன்
மலைமீது நிற்கின்றானே
மன்றாடி நம் அவனைக் கொண்டாடி வழிபட்டால்
மடி மீது நிற்பான் தானே
நின்றாடி வணங்கிடுவோம் நிதம் அவனைத் தொழுதிடுவோம்
நீங்கி விடும் துயரமெல்லாம்
நீலமயில் ஏறி வரும் பாலகனைத் துதித்திடுவோம்
நிதம்நமது வாழ்க்கை எல்லாம்
குன்றாடி வரும் வேலா குன்றக்குடி பாலா
குழந்தை வடிவேலா வா! வா!
குறையெல்லாம் போக்கி நிதம் கோபுரமாய் வளங்கலெல்லாம்
குறையாமல் தருக வா! வா!
இன்றோடி வருகின்றோம் இருமாதர் புடைசூழ
எழுந்தோடி விரைந்து வருவாய்
இன்றோடு துயரெல்லாம் எமைவிட்டு அகன்றுவிட
இருவிழியால் வரங்கள் தருவாய்

- கவிஞர் மா. கண்ணப்பன்

## ஸ்ரீ சுப்ரமண்ய சப்தகம்

வேலனே சக்தி மகனே!
வேலனே சக்தி மகனே!

கந்தனே! கடம்பனே! கருத்தினில் உறைந்திடும்
கருணை வடிவான குகனே!
கண்களோ பன்னிரண்டிருந்திடினும் ஏழையைக்
காக்க ஒரு கண்ணுமிலையோ!
சிந்தனை முழுவதும் சிதறிடா வண்ணமுன்
செம்மலர்ப் பாதங்களே

சரண் அன்று கொண்டுனைச் சந்ததம் பாவினேன்
செவிகளில் விழவில்லையோ
வந்தனை செய்துனை வாழ்த்தியே நாளெல்லாம்
வாழ்த்திடும் சிறுமி என்னை
வாழவே வைப்பதும் வேலனே உனக்கு ஒரு
விளையாட்டுச் செய்கை யன்றோ!
வந்தெனை இக்கணம் வலியவந்தே
அருள வேண்டியே பணிந்து நின்றேன்
வளமான திருத்தணியில் வந்து நிதம்
வாழ்கின்ற வேலனே! சக்தி மகனே! (வேலனே)

எத்தனை விதங்களில் என் அப்பனே!
உன்னையான்! எப்படிப்பாடினாலும்
எத்தனை இடங்களில் என்ஜயனே!
உனையான் எப்படி நோக்கினாலும்
எத்தனைபேர் சொல்லி என் குறைகள் யாவுமே
எடுத்து நான் கதறினாலும்
ஏலாமல் இன்னுமேன் என்னையே சோதித்து
எள்ளி நகையாடுகின்றாய்!
உத்தமன் உன்னையே ஓர் துணை என்று நான்
உறுதியாய் பற்றி நின்றேன்
உடனே உன் மயில் மீது ஓடோடி வந்தெனது
உறுவினைகள் யாவும் களைவாய்
பித்தனின் மைந்தனே! பக்தியாற் பிதற்றுமிப்
பித்தனையும் ஆண்டருள் வாய்!
பெருமைபொலி செந்தூரில் புகழ் சேர ஒளிர்கின்ற
பாலனே சக்தி மகனே! (வேலனே)

கதியாக உன்பதங் கருத்தினில் கொண்டு நான்
கதறியே அழுகின்றதும்
கொடுமையாம் வறுமையிற் குமைந்து நான்
உன்னருளைக் கூவியே தொழுகின்றதும்
பதியான உன் செவிகள் பன்னிரண்டிலொன்றிலுமே
பதியாமல் இருப்பதேனோ
படுதுயரம் இனிமேலும் படமுடியாதப்பனே
பார்த்தருள் புரிகுவாயே!
விதியான தென்னைமிக வாட்டியே வதைத்திடவும்
வேறொன்றும் செய்வதறியேன்
விழிகளில் நீர் பெருக வீழ்ந்து நான் கதறுவதை
வேடிக்கை பார்ப்பதழகோ

துதிபாடி உன்னையே தொழுகின்ற என் துயர்
துடைப்பதுன் கடமையன்றோ!
தூய்மைசேர் பழனிதனில் தனியாகத் தவங்கொண்ட
தூயனே! சக்தி மகனே! (வேலனே)

மாயவன் மருகனே! மாகாளி மைந்தனே!
மனத்தினில் என்றும் வதியும்
மாயா சொரூபிணியும் மலையரசன் மகளுமாம்
மாசக்திவேல் கொண்டவா
தூயவன் உன்னையான் தினமுமே பாடியும்
திருவுளம் இரங்க விலையோ!
துதிப்பதில் பிழையேது மிருப்பினும் தயவாகப்
பொருத்தருள் தள்ளிடாதே!
நீயெனைத் தள்ளிடினும் நானுனது பாதமே
நம்பினேன் நாளும் ஐயா!
நெஞ்சமும் உருகியே நீராக விழிகளில்
நாளெல்லாம் ஓட நானும்
ஐயனே உன்னடிகள் அடைக்கல மென்றடைந்திட்டேன்
ஆண்டருள் செய்குவாயே!
அழகான ஏரகத்தமருமொரு குருவே! என்
அன்னையாம் சக்தி மகனே! (வேலனே)

பாரதனில் பிறந்திட்டுப் பலகஷ்டம் தான்பட்டுப்
பாவியேன் மிகவும் நொந்தேன்
பார்த்தருள் புரிகுவாய்! பார்வதியின் மைந்தனே
பாலனே! கருணை செய்வாய்!
பேரெதுவும் வேண்டிலேன்! புகழ் வேண்டேன்
உன்பாதப் புகலொன்றே போதுமப்பா!
பேதை நான் படுந்துயரை புரிந்து நீ
அருள் புரிந்து பாரெல்லாம் வாழவைப்பாய்
ஆரெதும் சொல்லிடினும் அத்தனையும் உன்னடியின்
அர்ப்பணித் தமைதி கொள்வேன்
ஆதரவு நீயன்றி ஆகுமெனக் கில்லையென
அன்றே நான் கண்டுகொண்டேன்
ஊரெதனில் உறைந்தாலும் உள்ளத்தில் என்றுமே
உன்னை நான் சிக்க வைத்தேன்
உயர்வான பழமுதிர் சோலைதனில் உறைகின்ற
ஒருவனே சக்தி மகனே! (வேலனே)

அஷ்டமா சித்திகளும் அண்டியுன் பாதமே

அடைபவர்க்கருள விலையோ!
அற்புதங்கள் பலவாக அனுதினமும் உன்னருளால்
அகிலத்தில் அமைவதிலையோ!
கஷ்டமே நிறைந்திட்ட கர்மவினையாமென்னும்
கடலிலே தள்ளிவிட்டாய்!
கடக்குமொரு தோணியாய்க் காட்சியும் தந்தென்னைக்
காப்பதுன் கடமை ஐயா!
துஷ்டனாம் சூரனைத் துண்டு துண்டாக்கியே
தேவர்கள் துயர் தீர்த்தவா!
தொல்லைவினைகள் சூழ்ந்தெனைத் தொல்லை செய்யாமலே
தடுத்தெனைத் தாங்கி நிற்பாய்!
இஷ்டமாய் உன்னை என் இதயத்தில் என்றுமே
ஏற்றனன் என்னை ஏற்பாய்!
இலகுபுகழ் பரங்குன்றில் இருமாதர் இணைந்துறையும்
இன்பமே! சக்தி மகனே! (வேலனே)

எத்தனை ஜென்மங்கள் எடுத்தேனோ தெரியாது
இப்பூமிதன்னில் ஐயா
இனியேது ஜென்மமும் இவ்வேழைக் கில்லையென
இரங்கிநீ அருள வேண்டும்
முக்திநீ தரவேண்டி முழுவதுமே உன்னை நான்
முக்காலும் நம்பி வாழ்வேன்
முன்பின்னும் தெரியாது! மூவாசை ஒழித்து நான்
முடிவினில் உன்னைச் சேரவே
அத்தனே! அருட்பதம் அண்டினேன்! அடியனை
ஆண்டருள் செய்குவாயே!
அன்புடன் என்னை நீ அரவணைத் திகபரம்
இரண்டிலும் வாழவைப்பாய்
பித்தனாம் எளியேனின் பிதற்றமிலாப் பனுவல்
பாடும் உன் பக்தர் எல்லாம்
பாரிலே சீர்பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடவே
போற்றினேன்! சக்தி மகனே! (வேலனே)

×------×------×